# வீட்டிலேயே மாசுபடுவதைத் தடுத்திடுங்கள்

## காட்டுவெள்ளத்தினால் ஏற்படும் மாசு

காட்டுவெள்ள ஓட்டம் என்பது, மழை பெய்தல் மற்றும் பனிபெய்வதில் இருந்து உருகிவரும் நீரானது கற்கள் பாவிய வாகன நிறுத்த இடங்கள் அல்லது வாகனம் ஓடிவரும் கடினமான தரைகளிலும் மற்றும் பிராம்ப்டன் நகர காட்டுவெள்ள வடிகால் பாதை அமைப்புகளிலும் பாய்வதாகும்; இந்த வடிகால் பாதையானது உள்ளூர் ஆறுகள் மற்றும் சிற்றோடைகளில் கலக்கும்.

காட்டுவெள்ள ஓட்டம் என்பது, தான் வரும் வழியில் இருக்கக்கூடிய எண்ணெய், பூச்சிக்கொல்லி மருந்துகள், கனமான உலோகங்கள், இரசாயனப் பொருட்கள், சாலையில் படிந்துள்ள உப்பு மற்றும் இன்னும் பலவற்றை அள்ளிக்கொண்டு வருவதால் மாசு உண்டாக்கலாம்.

**நீங்கள் உங்கள் வீட்டிலேயே இப்படியான மாசுபடுத்தும் பொருட்களை காட்டு வெள்ளத் தடுப்பு அமைப்பினுள் நுழைந்துவிடாதபடி, காட்டுவெள்ள மாசினை தடுக்க உதவலாம்**

## சுகாதார அமைப்பின் வடிகாலுக்கும் காட்டுவெள்ள வடிகாலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

சுகாதார வடிகால் அமைப்பில், கழிவறைகளில், சின்க்-கள், ஷவர்கள், துவைக்கும் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்களின் அடித்தளத் தரைகளில் இருக்கும் வடிகால்கள் ஆகியவற்றில் இருந்து வரும் அசுத்த நீரைத் திரட்டி, கழிவுநீர் சுத்திகரிப்பு கட்டமைப்புக்கு கொண்டு சென்று, சுத்திகரிக்கப்பட்டு, ஒன்ட்டாரியோவின் ஏரிக்குள் செலுத்தப்படுகிறது.

காட்டுவெள்ள வடிகால் அமைப்பானது காட்டுவெள்ளப் பாய்ச்சலில் ஓடிவரும் நீரை, காட்டுவெள்ளச் சேகரிப்புக்கான குளங்களுக்கோ அல்லது நேரடியாக உள்ளூர் ஆறுகளிலோ அல்லது சிற்றோடைகளிலோ பாயவிட்டு பின்னர் இறுதியாக ஒன்ட்டாரியோ ஏரிக்குள் விடப்படுவதாகும்.

இப்படி ஓடிவரும் நீரானது உள்ளூர் ஆறுகள் மற்றும் சிற்றோடைகளை அடைந்து, ஒன்ட்டாரியோ ஏரிக்குள் பாய்ந்து கலந்துவிடும்.

## காட்டுவெள்ள மாசு என்றால் என்ன?

காட்டு வெள்ளமானது, சாலைகள் போன்ற கடிமான தரைகள், மேற்கூரைகள், வாகன நிறுத்த இடங்கள் மற்றும் பக்க வாட்டு நடைபாதைகளில் பாய்ந்து செல்லும்போது, இவற்றை எல்லாம் திரட்டிச் செல்கின்றது:

- செல்லப்பிராணிகளின் கழிவு
- குப்பைகள்
- தூசு, மண் மற்றும் முற்றத்தில் இருக்கும் கழிவுப்பொருட்கள்
- சாலையில் இருக்கும் உப்பு படிமானம்
- உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள்
- வாகனங்களில் உபயோகிக்கப்படும் எண்ணெய், எரிபொருள் மற்றும் கிரீஸ்
- பெயிண்ட்டுகள் மற்றம் கரைப்பான்கள்



பிராம்ப்டன் நகரம்

## திட்டமிடல், கட்டுமானம் செய்தல் & வளர்ச்சிக்கான மேலாண்மை

இந்தத் தகவல்களை நீங்கள் இன்னொரு மொழியில் கேட்க வேண்டும் என்றால், 3-1-1 க்கு அழைத்து தொலைபேசி வாய்மொழி மொழிபெயர்ப்பு பெறுங்கள்

பிராம்ப்டன் நகரில் காட்டுவெள்ள மாசினைக் குறைப்பதற்கான இன்னும் பல வழிகள் பற்றி அறிய, வருகை புரியவும்: Brampton.ca/Pollution-Prevention

SCAN ME

BRAMPTON



## வீட்டிலேயே மாசு ஏற்படுவதைத் தடுக்க உதவுங்கள்

காட்டுவெள்ள மாசுத் தடுப்புக்கு நாம் அனைவரும் உதவ முடியும் மற்றும் உள்ளூர் ஆறுகள் மற்றும் சிற்றோடைகளின் தூயதன்மையை, இந்த செயல்படிகளை உபயோகித்து காக்கமுடியும்:

- உங்கள் கட்டிடங்களைத் தூய்மையாகவும் குப்பைகள் இல்லாதபடியும் வைத்தல்
- உங்கள் செல்லப்பிராணியின் கழிவுகளைச் சேகரித்து முறையாக அப்புறப்படுத்தல்
- உப்பு உபயோகிப்பதை கவனமாகச் செய்தல். உப்பு இடுவதற்கு முன்னதாக பனியை வெட்டி மற்றும் வாரி எடுத்து அகற்றிவிட்டு இடவும்.
- உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் உபயோகிப்பதை குறைக்கவும் அல்லது அறவே தவிர்க்கவும்.
- வாகனங்களில் உபயோகிக்கப்படும் எண்ணெய், உறைதலுக்கு எதிரான பொருட்கள் மற்றும் பெயின்ட்டுகள் போன்ற வீட்டுபயோக ஆபத்தான பொருட்களை பீல் பிராந்திய சமுதாய மறுசுழற்சி மையங்களில் கொண்டு சேர்த்து அப்புறப்படுத்தவும்.
- குளங்களுக்குள் நீரை விடுவது சம்பந்தமான நகரத்தின் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றவும்.

**மழைநீரை மட்டுமே வடியவிடவும்!**

### நமது உள்ளூர் நீர்வழிப்பாதைகளை மாசுபடுவதிலிருந்து காக்கும் தீர்வு காணலுக்கு ஒரு அங்கமாக இருந்து செயல்படவும்

காட்டுவெள்ள வடிகால்களில் மழைநீர் மற்றும் பனி உருகிச்செல்லும் நீர் மட்டுமே செல்வதை உறுதி செய்து, காட்டுவெள்ள மாசு ஏற்படுவதை நீங்கள் தடுக்கலாம்.

குப்பை கொட்டப்படுவதை நீங்கள் கண்டால் இங்கு புகார் அளிக்கவும்:

- பீல் பிராந்திய அவசர நிலை செவிசாய்ப்புக் குழு: 905-791-7800 (24- மணி நேரமும்)
- குப்பை கொட்டுதலுக்கு எதிரான நடவடிக்கை மையம் ஒன்ட்டாரியோ 1-866-MOE-TIPS (24-மணி நேரமும், வாரத்தின் 7 நாட்களும்)
- பிராம்ப்டன் நகர நிர்வாகம்: அழைக்கவும் 311



## சுற்றுச்சூழல், சமுதாயம் மற்றும் உள்கட்டுமான அமைப்பு ஆகியவற்றைக் காக்கும் பொறுப்பு நம்மிடம்தான் உள்ளது.